RESEARCH ARTICLE

# தொல்காப்பியத்தில் உணர்வுக் கோட்பாடு

*The Theory of Feeling in Tholkappiyam*

**PRIYANKA K[1,*], N. SIVAGURU Dr[1]**

[1] *Tamil department, Thiruvalluvar university, serkkadu, Vellore, India*

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** PRIYANKA K — priyakasinadhan16@gmail.com
**ORCID:** PRIYANKA K https://orcid.org/0009-0000-7074-8848; Dr N. SIVAGURU https://orcid.org/0000-0001-9425-1078

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 20 September 2026 | 25 September 2026 | 28 September 2026 | 01 October 2026 |
| **Article ID / கட்டுரை எண்** | **DOI** | **Vol. / No.** | **Pages** |
| TAJP-2026-00002 | 10.63300/tm1205102026.01 | Vol. 12, No. 05 | 1–10 |

### ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியம் தமிழர்களின் அகப்புற வாழ்வியலை வெளிப்படுத்துகிறது. தொல்காப்பியம் வாழ்வியலுடன் இலக்கணத்தை எடுத்துக்கூறுகிறது. புலவர்கள் தாங்கள் வாழும் காலத்து நிகழ்வுகளைப் புனைவுளுடன் பாடல்களாகப் படைக்கின்றனர். இப்புனைவுகளுள் அவர்களது உணர்வுகள் மாந்தர்களின் வழியாக நம்மை அடைகின்றன. தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்றிற்குள் ஐவகை இலக்கணத்தையும் வகுத்துக் கூறியுள்ளார். தொல்காப்பியக் கருத்துகளை அடியொற்றியே தமிழிலக்கிய, இலக்கண ஆய்வுலகில் பெரும்பான்மையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வகையில் உணர்வு தொடர்பான கருத்தாக்கங்கள் தொல்காப்பியத்தில் பதிவிடப்பட்டுள்ள விதத்தை ஆய்வது உணர்வுசார் ஆய்வுகளுக்கு அடிப்படையானதாக அமைகிறது.

### Abstract

Sangam literature reveals the inner life of the Tamilans. The Tolkappiyam describes grammar along with life. Poets create poems with stories about the events of their time. In these stories, their feelings reach us through the medium of the characters. The Tolkappiyar has also divided grammar into five types: letter(eluthu), word(sol) and meaning(porul). Most of the studies in the field of Tamil literature and grammar are being carried out based on the concepts of Tolkappiyam. Thus, studying the way concepts related to feelings are recorded in the Tolkappiyam becomes the basis for emotional studies.

**Keywords / திறவுச்சொற்கள்:** தொல்காப்பியம்; உணர்வு; உணர்ச்சி; மெய்ப்பாடு

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** K, P., & Dr, N. S. (2026). தொல்காப்பியத்தில் உணர்வுக் கோட்பாடு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 12(05), 1–10. https://doi.org/10.63300/tm1205102026.01

**முன்னுரை**

உணர்வு பெறுதல், உள்ளக்கிளர்ச்சி உருவாகுதல், உணர்ச்சி வெளிப்படுதல், குணப்பண்பை உருவாக்குதல், நடத்தையைத் தீர்மானித்தல், சமூக அடையாளம் கட்டமைக்கப்படுதல் என்னும் இவற்றைச் சார்ந்து மனிதனின் சிந்தனை அமைகின்றது. அன்றாட மனித வாழ்வில் இவையனைத்தும் மறைமுகமாக நம்முடன் பயணிக்கின்றன. ஒருவர் தமது உள்ள உணர்வுகளைப் புலப்படுத்தவும், ஒருவரது உணர்வைப் பிறர் அறிந்து கொள்ளவும் உணர்ச்சிகள் (மெய்ப்பாடுகள்) புலப்பாட்டுக் கருவிகளாக செயல்படுகின்றன. பேச்சு மொழித் தொடங்குவதற்கு முன்னர் இச்செயல்பாடு அவசியமான ஒன்றாக அமைந்தது. பேச்சு மொழி உருவாக்கப்பட்ட பின்னர் மனிதன் பேச்சின் வழியாகவும், சைகைகள் மூலமாகவும் முகபாவனைகள் மூலமும் உணர்ச்சியை வெளிப்படுத்தத் தொடங்கினான். இவ்வாறு உணர்வுகளைச் சார்ந்த உணர்ச்சிகள் வாழ்வில் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதுடன், வாழ்வை இயக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**தொல்காப்பியத்தில் உணர்வு**

இலக்கிய வழக்கிலும் உணர்வுகளுக்கு முக்கியமான பங்கு உண்டு. பாடல் இயற்றும் புலவர்கள் தமது உணர்வுகளைப் புகுத்தி பாடல்களை இயற்றினர். பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் மெய்ப்பாட்டைச் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகவும், தனி இயலாகவும் விளக்குகிறார். தொல்காப்பியத்தில் இடம்பெறும் உணர்வு சார்ந்த தகவல்கள்,

1. ‘உணர்’ சொல்லின் அடிச்சொற்கள் / சொற் பயன்பாடு
2. மெய்ப்பாட்டியலில் உணர்வுகள்
3. மெய்ப்பாட்டுச் சொற்கள்

எனும் பிரிவுகளின் கீழ் ஆராயப்படுகின்றன.

**‘உணர்’ சொற் பயன்பாடு**

தொல்காப்பியத்தில் ‘உணர்’ என்னும் சொல்லின் அடியாக 42 சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் அறிதல் என்னும் பொருண்மையில்,

**“உணரக்கூறின்” (தொல்.நூ.35)**

**“உணரக்கூறிய” (தொல்.நூ.405)**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**"உணரத்தோன்றா" (தொல்.நூ.482)**

**"புலன் நன்குணர்ந்த" (தொல்.நூ.958)**

**"உணர் வகைத்தே" (தொல்.நூ.995)**

**"அறிவுணர" (தொல்.நூ.1078)**

**"உணர்ப்புவயின்" (தொல்.நூ.1096)**

**"புலன் உணர்ந்தோரே" (தொல்.நூ.1497)**

**"உணர்ந்தோர்" (தொல்.நூ.1308)**

**"உணர்வோரே" (தொல்.நூ.1326)**

**"உணர்ந்திசினோரே" (தொல்.நூ.1353)**

**"உணர்ந்தனர் கொளலே" (தொல்.நூ.602)**

**"உணர்த்தற்கும் உரிய" (தொல்.நூ.856)**

**"இயல்பு உணர்ந்தோரே" (தொல்.நூ.950)**

**"உணரும்" (தொல்.நூ.1241)**

**"உணரும் காலை" (தொல்.நூ.1242)**

ஆகியன கையாளப்பட்டுள்ளன. மேலும்,

**"உணர்த்தல்" (தொல்.நூ.872)**

**"உணர்த்தும்" (தொல்.நூ.1178)**

**"உணர்தல்" (தொல்.நூ.1073)**

**"உணர்ந்த போல" (தொல்.நூ.1148)**

**"உணர்தற்கும்" (தொல்.நூ.1180)**

**"உணர்ந்தும்" (தொல்.நூ.1181)**

**"உணரும்" (தொல்.நூ.1241)**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

ஆகிய சொற்கள் விளங்க வைத்தல், அறிவுறுத்தல் எனும் பொருண்மையில் கையாளப்பட்டுள்ளன. இவர், 'உணர்ச்சி' எனும் சொல்லை இரு இடங்களில் கையாளுகிறார். உரியியலில்,

**"உணர்ச்சிவாயில் உணர்வோர் வளித்தே" (தொல்.நூ.876)**

என்கிறார். உரிச்சொற்களை விளக்கிக்கொண்டு வரும்போது சொல்லுக்குரிய பொருண்மைப் பற்றி கூற வந்தவர், சொல்லைக் கேட்பவர்களின் அறிவினைச் சார்ந்தே சொல்லின் பொருள் உணரப்படும், அறியப்படும் என்கிறார். களவியலில்,

**"நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்**
**செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்**
**புணர்ச்சி எதிர்ப்பாடுள்ளுறுத்து வரூஉம்**
**உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை" (தொல்.நூ.1060)**

என்ற நூற்பாவில், 'உணர்ச்சி ஏழு' எனப் பட்டியலிட்டுள்ளார். இங்கு இயற்கைப் புணர்ச்சியின் பின்னர் வேறுபட்டிருக்கும் தலைவியின் செயல்பாடுகளைத் தோழி கண்டறியும் திறத்தைக் குறிப்பிட 'உணர்ச்சி' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. தலைவியின் செயல்பாடுகளை உற்றுநோக்கி அறிதல் என்ற பொருளிலே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. 'உணர்' எனும் சொல்லின் அடியாகப் பிறந்த 42 சொற்களும் தொல்காப்பியரால் அறிதல், புரிதல், விளங்கிக் கொள்ளல் முதலான பொருண்மைகளிலேயே கையாளப்பட்டுள்ளன.

### மெய்ப்பாட்டியலில் உணர்வுகள்

தொல்காப்பியப் பொருளதிகார மெய்ப்பாட்டியலில் மெய்ப்பாடு மற்றும் உணர்வுகள் பற்றி தொல்காப்பியர் விளக்குகிறார்.

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப" (தொல்.மெய்.நூ.3)**

எனும் நூற்பாவானது நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறுகிறது. நகை தொடங்கி உவகை வரையுள்ள வைப்பு முறைக்கு பேராசிரியர் கூறும் காரணங்கள், **"இங்கே கூற எடுத்துக்கொண்ட எண்வகை மெய்ப்பாடுகளும் முடியுடை வேந்தரும் குறுநில**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும் பாடலுங்கண்டுங்கேட்டுங் காம நுகரும் இன்ப விளையாட்டின் நிகழ்ச்சிகளோடு ஒருவாற்றில் தொடர்புடையனவே என்பது புலப்படுத்துவார். விளையாட்டுப் பொருளினதாகிய நகையென்னும் மெய்ப்பாட்டினை முதற்கண் வைத்தார். நகைக்கு மாறுதலையானது அழுகையாதலின் அதனை நகையின் பின் வைத்தார். அழுகையும் இளிவரலோடு ஒக்குமாதலால் அழுகையின் பின் இளிவரலை வைத்தார். தாம் இளிவுற்றுத் தாழ்ந்த நிலையில் தம்மினும் உயர்ந்தவற்றையெண்ணி வியத்தல் மக்களது இயல்பாதலின் இளிவரலின் பின் மருட்கை வைத்தார். வியப்பாகிய மருட்கை பற்றியும் அச்சம் பிறத்தலின் மருட்கையின் பின் அச்சத்தை வைத்தார். அச்சத்திற்கு மறுதலை வீரமாதலின் அச்சத்தின் பின் வீரத்தை வைத்தார். வீரத்தின் பயனாகப் பிறப்பது வெகுளியாதலின் வீரத்தின் பின் வெகுளியை வைத்தார். வெகுளிக்கு மறுதலையாதலானும் எல்லா சுவைகளிலுஞ் சிறந்ததாதலானும் முதலிற்கூறிய நகையுடன் தொடர்புடையதாதலானும் உவகையை இறுதிக்கண் வைத்தார் என நகை முதல் உவகையீராக வுள்ள எண்வகை மெய்ப்பாடுகளின் வைப்பு முறைக்குப் பேராசிரியர் கூறும் காரணங்கள் நினைக்கத் தக்கனவாகும்" (தொல்காப்பிய உரைவளம், ப.31)** எனும் ஆய்வுரையின் வழியாகப் பெறப்படுகிறது. மெய்ப்பாட்டியல் நான்காவது நூற்பா தொடங்கி பதினொன்றாவது வரையுள்ள நூற்பாக்களில்,

**"எள்ளல் இளமை பேதைமை மடனென்று**

**உள்ளப் பட்ட நகைநான் கென்ப." (தொல்.மெய்.நூ.4)**

**"இழிவே இழவே அசைவே வறுமையென**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே." (தொல்.மெய்.நூ.5)**

**"மூப்பே பிணியே வருத்த மென்மையோடு**

**யாப்புற வந்த இளிவரல் நான்கே." (தொல்.மெய்.நூ.6)**

**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமாடு**

**மதிமை சாலா மருட்கை நான்கே." (தொல்.மெய்.நூ.7)**

**"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**

**பிணங்கல் சாலா அச்சம் நான்கே." (தொல்.மெய்.நூ.8)**

**"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே." (தொல்.மெய்.நூ.9)**

**"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே." (தொல்.மெய்.நூ.10)**

**"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென**
**அல்ல்ல் நீத்த உவகை நான்கே." (தொல்.மெய்.நூ.11)**

என்று எண்வகை மெய்ப்பாடு, அவற்றிற்குரிய 32 உணர்வுகளையும் பட்டியலிட்டுள்ளார். முதல் நான்கு மெய்ப்பாடுகளும் தன்னிடமும் பிறரிடமும் தோன்றுவதென்று பிரித்துப் பார்க்க இயலாதென எனவும், பின் நான்கு மெய்ப்பாடுகளும் தன்னிடமும் பிறரிடமும் தோன்றுவன என பிரித்து பார்க்கக் கூடியதாகவும் உள்ளன.

ஒவ்வொரு மெய்ப்பாட்டிற்கும் உரிய காரணங்களைக் குறிப்பிடுகையில் தொல்காப்பியர் குறிப்பிடும் சொற்கள் அவற்றை நுண்ணிதின் உணர்த்துவதாய் உள்ளன. முன் கூறப்பட்ட நூற்பாக்களில் **'உள்ளப்பட்ட'** என்பது நுண்ணிதின் ஆராய்ந்து அறியப்படும் நகை என்பதையும், **'விளிவில் கொள்கை'** என்பது கேடில்லாத கொள்கையினால் அழுகை பிறக்கும் என்பதையும், **'யாப்புற வந்த'** என்பது தொடர்ந்து படர்ந்தும் வலிமையுடன் பிறக்கும் இளிவரல் என்பதையும், **'மதிமை சாலா'** என்பது அறிவுடையோரிடம் ஏற்படுதலில்லாத மருட்கை என்பதையும், **'பிணங்கல் சாலா'** என்பது தடுமாற்றமில்லாதவர்க்கு அச்சம் ஏற்படாது என்பதையும், **'சொல்லப்பட்ட'** என்பது கூறப்பட்ட பெருமிதங்கள் இவையே என விரிந்த எல்லைப் பரப்பைக் கூறுகிறது என்பதையும், **'வெறுப்பவந்த'** என்பது வெறுப்பினால் உண்டாகும் வெகுளி என்பதையும், **'அல்லல் நீத்த'** என்பது துன்பத்தினைத் தீர்த்துப் பிறந்த உவகை என்பதையும் விளக்குவதாய் அமைகிறது.

**"ஆங்கவை ஒருபால் ஆக வொருபா லாக**
**உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்**
**தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்**
**கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்**
**நாணல் துஞ்ச லரற்றுக் கனவெனாஅ**
**முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை**
**கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை**

**வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ**

**அவையும் உளவே அவையலங் கடையே" (தொல்.மெய்.நூ.12)**

என்ற நூற்பாவில் 32 மெய்ப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. இதற்கு அடுத்து நூற்பா எண். 13 முதல் அகத்திணைக்கு உரிய மெய்ப்பாடுகளைப் பற்றி கூறியுள்ளார். இம்மெய்ப்பாடுகள் அனைத்தும் தலைவிக்கு உரியனவாகவே கூறப்பட்டுள்ளன. தலைவனிடம் சில மெய்ப்பாடுகள் தோன்றலாம். இதனை பற்றி ச. சோ. பாரதியார், **"பெருமையும் உரனுமுடைய தலைவன் தன் தழையுங் காதலை ஒலியானாக, அச்சமும் நானும் மடனும் முந்துறத்த நிச்சமும் பெண்பார்க்குரிய தன்மையால் தலைமகள் தன் சுரக்குங் காதலைக் கரக்குமாதலின் இம்மெய்ப்பாடு பெரிதும் அவள் மாட்டே காணப்பெறும்." தொல்காப்பியப் பொருட்படலப்புத்துரை மெய்ப்பாட்டியல், பக்.47-48)** என்று கூறுவது பொருத்தமானதாக அமைகிறது. மெய்ப்பாட்டியலின் இறுதியாக,

**"கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும்**

**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**

**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"**

**(தொல்.மெய்.நூ.27)**

எனும் நூற்பாவில், இதுவரையிலும் கூறப்பட்ட மெய்ப்பாடுகளின் நுட்பமானது, கண்ணாலும், செவியாலும், திட்பமாக அறியும் திறன் கொண்ட சான்றோர்களாலேயே அறிய இயலும். மற்றவர்களுக்கு பொருள் விளங்குதல் கடினம் என கூறுகிறார்.

எனவே, தொல்காப்பியர் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடுகளுக்கு காரணமாக அமையும் 32 வகைகளான,

நகை - எள்ளல், இளமை, பேதமை, மடன்

அழுகை - இளிவு, இழவு, அசைவு, வறுமை

இளிவரல் - மூப்பு, பிணி, வருத்தம், மென்மை

மருட்கை - புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்

அச்சம்- அணங்கு, விலங்கு, கள்வர், இறை

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

பெருமிதம் - கல்வி, தறுகண், இசைமை, கொடை

வெகுளி - உறுப்பறை, குடிகோள், அலை, கொலை

உவகை - செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு

என்பன உணர்வுகளாக அமைகின்றன.

டாக்டர்.மு. பொன்னுசாமி அவர்கள், **“உடைமை, இன்புறல், நடுவுநிலைமை, அருள், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், முனிதல், நினைதல், சூழ்ச்சி, கருதல், ஆராய்ச்சி, வரைவு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, ஐயம், மிகை என்பன. இதை உடற்புறக்குறிச் சுட்டுப் பெறாமையால் மெய்ப்பாடுகளல்ல.” (சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள், ப.25)** என்று இருபத்தொன்றை உணர்வுகளாகச் சுட்டியுள்ளார். அவ்வகையில் தொல்காப்பியர் கூறியுள்ள 32 மன நிகழ்ச்சிகளுள் உடைமை, இன்புறல், நடுவுநிலைமை, தன்மை, அருளல், அடக்கம் வரைதல், அன்பு, கைம்மிகல், சூழ்ச்சி, முனிதல், நினைதல், கருதல், சூழ்ச்சி, ஆராய்ச்சி, வரைவு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, ஐயம், மிகை ஆகியவை புறத்தே வெளிப்படுத்தப்படுவதாக அல்லாமல், அகத்தே உணரப்படும் உணர்வுகளாக உள்ளத்தின் கண் உணரப்படுவனவாக உள்ளன.

எண் வகை மெய்ப்பாடு + உணர்வுகள் – 8 × 4 = 32

மன நிகழ்வுகள் – 21 = 21

மொத்தம் (உணர்வுகள்) = 53

இதற்கு அடுத்ததாக களவுக்கால, பிரிவுக்கால, கற்புக்கால மெய்ப்பாடுகள் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு இவற்றிற்கு காரணமான உணர்வுகள் குறிப்பிடப்படவில்லை. இம்மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கு ஒரே உணர்வோ அல்லது பல உணர்வுகளோ காரணமாக அமையலாம். மேலும், இவற்றை விரிவாக்கி உணர்வுகளைப் பட்டியலிடுவது பொருத்தமாக அமையாது என்கிற காரணத்தால், இவை தொல்காப்பியரால் சுட்டப்படாமல் விடப்பட்டிருக்கலாம். உணர்வுகள் என்பவை எண்ணிலடங்காதவை. அவற்றைப் பட்டியலிட்டுக் குறிப்பிட்ட எல்லைக்குள் சுருக்கி உரைப்பது இயலாதது என்பதும் இங்கு உணரத்தக்கது.

**மெய்ப்பாட்டுச் சொற்கள்**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் மட்டுமல்லாது பிற இயல்களிலும் மெயப்பாடுகள் சார்ந்த சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். மெய்ப்பாடுகளைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களே 'மெயப்பாட்டுச் சொற்கள்' என இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. உரியியலில் சொற்களுக்குரிய பொருளைத் தெளிவுப்படுத்தும்போது,

**அழுகை** - அழுங்கல்

**இளிவரல்** - தா, உயா(வருந்துதல்)

செல்லல், இன்னல்,விழுமம் (துன்பம்)

பையுள், சிறுமை(நோய்)

**மருட்கை** - ஐ

**அச்சம்** - உரு, விறப்பு, பேம், நாம், உரும், கடி, ஐயம், கதழ்வு, துணைவு

**பெருமிதம்** – தட, கய, நளி, புரை, உகப்பு, விழுமம்

**வெகுளி** – முனைவு, கறுப்பு, சிவப்பு

**உவகை** – உவப்பு, மாதர், நம்பு, மே, வெம்மை, வயா, கம்பலை,

எம்மை, கலி

என மெய்ப்பாடுகளுக்கு உரிய சொற்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுடன் ஆழ்ந்து சிந்தித்தல் என்பதைக் குறிப்பிட 'உசா' என்ற சொல்லும், நினைவைக் குறிப்பிட 'ஏற்றம்' என்ற சொல்லும், தனிமையைக் குறிக்க 'புலம்பு' என்ற சொல்லையும் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

தொல்காப்பியம் மொழி மற்றும் வாழ்விற்கான இலக்கணங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. தொல்காப்பியத்தின் பதிவுகள் பல்துறைகளின் பல்வேறு ஆய்வுகளுக்கு அடித்தளமாக அமைகின்றன. உளவியல் தொடர்பான ஆய்வுகளுக்கு உரியதாகவும் உள்ளன. 'உணர்' சொல்லின் அடியாகப் பறிந்த சொற்களின் பயன்பாடு தொல்காப்பியர் காலத்தில் தற்போதைய உணர்வு பொருண்மையில் பயன்படுத்தப்படவில்லை என்பதை உணர்த்துகிறது. மெய்ப்பாட்டியல் எனும் அதிகாரத்தில் உணர்வு, உணர்ச்சி தொடர்பான பதிவுகள் இடம்பெற்றுள்ளன. மெய்ப்பாட்டியலைத் தவிர்த்த பிற இயல்களிலும் மெய்ப்பாட்டைக் குறிக்கும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**துணைநூற்பட்டியல்**

1. டாக்டர் மு. பொன்னுசாமி, சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள், இந்து பதிப்பகம், கோயம்புத்தூர்.
2. பாவலரேறு ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் பொருளதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை (தொகுதி -3, பகுதி -3), பிப்பிரவரி 2012, பதிப்புத்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -004.
3. பேராசிரியர் சு. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் – மெய்ப்பாட்டியல் – உரைவளம், 1988, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை -021.
4. முனைவர் சா. வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, 2019, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை -108.

© 2026 PRIYANKA K, N. SIVAGURU Dr. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..